| | |
|---|---|
| INDIAN POLITY (THE HINDU) | – 100 Questions |
| Total Marks (1x1.5) | – 150 Marks |
| Time Duration | – 1 ½ Hours |




டிஎன்பிஎஸ்சி நடத்தும் அனைத்து வகையான போட்டித் தேர்வுகளிலும் இந்திய அரசியலமைப்பு (Indian Polity) பகுதி மிக முக்கிய இடம் வகிக்கிறது. லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் போட்டித் தேர்வுகளில் ஒவ்வொரு மதிப்பெண்ணும் மிக முக்கியம் என்பதால், அரசியலமைப்பு பகுதியில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமாகும்.குரூப் IV தேர்வில் இந்திய அரசியலமைப்பு பகுதியில் 15 கேள்விகள் வரை கேட்கப்படலாம். குரூப் IV தேர்வை பொருத்தவரை பின்வரும் தலைப்புகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படுகின்றன

இந்திய அரசியலமைப்பு, அரசியலமைப்பின் முகவுரை, இந்திய அரசியலமைப்பின் சிறப்பியல்புகள், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்கள், குடியுரிமை, அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தங்கள், அடிப்படை உரிமைகள், அடிப்படை கடமைகள், மனித உரிமை, நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி அமைப்புகள், நீதித்துறை, மத்திய தேர்தல் ஆணையம் மற்றும் அதன் பணிகள், தேர்தல் விதிமுறைகள், மாநில தேர்தல் ஆணையம், இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள அட்டவணை 8-ல் உள்ள மொழிகள், ஊழல், ஊழலை ஒழிக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், மக்கள் நீதிமன்றம், தீர்ப்பாயங்கள், இந்திய கணக்கு தணிக்கையாளர், தகவல் அறியும் உரிமை சட்டம், மகளிர் மேம்பாடு, நுகர்வோர் பாதுகாப்பு சட்டங்கள் போன்ற பகுதிகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்.அரசியலமைப்பின் முகவுரை பகுதியில், அதில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள், சட்டத்திருத்தம் ஆகியவை முக்கிய பகுதிகள் ஆகும். உதாரணமாக 42-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மூலம் முகவுரையில் சேர்க்கப்பட்ட Socialist, Secular & ntegrity போன்ற வார்த்தைகளுக்கான விளக்கம் கேட்கப் படலாம்.

அடிப்படை உரிமைகள் தலைப்பில் மொத்த அடிப்படை உரிமைகளின் எண் ணிக்கை, கட்டாய கல்வி அறிவு வழங்கும் சட்டம் போன்ற பகுதிகள் மிகவும் முக்கியமானவை.அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் தலைப்பில் சமூக நீதி, மனித உரிமை, ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே ஊதியம், வேலை வாய்ப்பை உருவாக்க அரசு செய்ய வேண் டிய செயல்கள், கல்வியறிவு வழங்க அரசு மேற் கொள்ள வேண்டிய செயல் கள், பொது சிவில் சட்டம் போன்றவற்றில் இருந்து கேள்விகள் வரலாம்

அடிப்படை கடமைகள் தலைப்பில் மொத்தமுள்ள அடிப்படை கடமைகள், அடிப் படை கடமையை இந்திய அரசியலமைப்பில் சேர்க்க பரிந்துரைத்த ஆணையம், அதில் மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தம் போன்றவை கேட்கப் படலாம் .குடியரசு தலைவர், குடியரசு துணை தலைவர் போன்ற தலைப்பில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை, வயது வரம்பு, பதவிக்காலம், அவர்களின் செயல்பாடுகள், குடியரசு தலைவருக்கு உள்ள அவசர சட்டமியற்றும் அதிகாரம், அவசர நிலையை பிரகடனப்படுத்துவதில் அவரது பங்கு பற்றி இப்பகுதியில் இருந்து கேட்கப்படலாம்.

ஆளுநர் தலைப்பில் அவர் நியமனம் செய்யப்படும் முறை, வயது வரம்பு, பதவிக்காலம், அவர்களின் செயல்பாடுகள், அவசர சட்டமியற்றும் அதிகாரம், அவசர நிலையை பிரகடனப்படுத்துவதில் அவரது பங்கு பற்றி கேள்விகளும் வர வாய்ப்பு உள்ளது. நாடாளுமன்றம் தலைப்பை பொருத்த வரையில் மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் முறை, பதவிக்காலம், வயது வரம்பு, பதவி நீக்கம், கட்சி தாவல் போன்ற பகுதிகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்.

மக்களவையில் குடியரசு தலைவரால் நியமனம் செய்யப்படும் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கை, அதே போன்று மாநிலங்களவைக்கு நியமனம் செய்யப்படும் நியமன உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கேட்கப்படலாம்.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் வரவு செலவு திட்டம், பண மசோதா பற்றியும் அதில் மக்களவைக்கு, உள்ள அதிகாரம் பற்றியும் கேள்விகள் வரவாய்ப்பு உள்ளது. நாடாளுமன்ற குழுக்கள், இந்திய தலைமை வழக்கறிஞர், இந்திய கணக்கு தணிக்கையாளர் பற்றியும் கேள்விகள் கேட்கப்படும் .சட்டமன்றத்தை பொருத்தவரை உறுப்பினர்களின் எண்ணிக்கை அவர்கள் தேர்ந்தெடுக்கப்படு ம் முறை, பதவிக்காலம், கல்வி தகுதி, வயது வரம்பு, பதவி நீக்கம், கட்சி தாவல் போன்ற பகுதிகளில் இருந்து கேள்விகள் கேட்கப்படும். சட்ட மேலவை உள்ள மாநிலங்கள், அதன் செயல்பாடு பற்றியும் கேள்விகள் வர வாய்ப்பு உள்ளது.

நீதிமன்ற தலைப்பில் உச்ச நீதிமன்றம் உயர் நீதிமன்றம், நீதிபதிகள் நியமனம், நீதி மன்றங்களின் பெயர் மாற்றம், நீதித் துறையில் மேற்கொள்ளப்பட்ட சீர் திருத்தங்கள், உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஏற்க எழுந்த கோரிக்கை, நீதித்துறை சம்பந்தமான நடப்பு நிகழ்வுகள் கேட்கப்படலாம்.இந்திய அரசியலமைப்பில் உள்ள ஆணையங்களில் தேர்தல் ஆணையம், தலைமைத் தேர்தல் ஆணையர், இந்திய தேர்தல் ஆணை யத்தால் நடத்தப்படும் தேர்தல்கள், மாநில தேர்தல் ஆணையத்தால் நடத்தப்படும் உள்ளாட்சி தேர்தல் போன்றவை கேட்கப்பட வாய்ப்பு மிக அதிகம். அதிலும் குறிப்பாக நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக் கு சதவீதம், தமிழ் நாட்டில் அதிகமாக மற்றும் குறைவான வாக்கு பதிவான சட்டமன்ற தொகுதிகள் பற்றி கேட்க வாய்ப்பு அதிகம்

நடப்பு நிகழ்வு சம்பந்தமாக நிதி ஆயோக் (NITI Aayog), தேசிய வளர்ச்சி கவுன்சில், ஊதிய குழு, நிதி ஆணையம், 21-வது சட்ட ஆணையம் போன்ற பகுதிகள் மிகவும் முக்கியமானவை குரூப் IV தேர்வுக்கு இந்திய அரசிய லமைப்பில் இருந்து பெரும்பாலும் ஷரத் துக்கள் கேட்கப்படுகின்றன. ஆணை யங்கள், அதன் தலைவர்களின் பெயர்கள், அந்த ஆணையங்கள் உருவாக்கப்பட்ட ஆண்டு, அதன் செயல்பாடு போன்ற வினாக்கள் அதிகம் கேட்கப்படும். இந்திய அரசியலமைப்பு சம்பந்தமான வழக்குகள், நடப்பு நிகழ்வு சம்பந்தமான கேள்விகளும் இந்த பகுதியில் கேட்கப்படலாம்

இந்திய அரசியலமைப்பு பகுதிக்காக பின்வரும் பாடப்புத்தகங்களை படிப்பது சிறந்தது.

மேல்நிலை 11 மற்றும் 12 அரசியல் அறிவியல். ஆங்கில வழியில் பயில்வோர் Indian Polity by Laxmikanth புத்தகத்தை படிப்பது சிறந்தது. தமிழ் வழியில் பயில்வோர் ராம்குமாரின் TNPSC தேர்வுக்கான இந்திய அரசியலமைப்பு புத்தகத்தை படிக்கலாம். தேர்வுக்கு விரைவாக படிக்க P. M Bakshi ன் The Constitution of India புத்தகத்தில் உள்ள The Constitution of India in a Nutshell தலைப்பின் கீழ் உள்ள 8 பக்கங்களை படித்தாலே பெரும்பாலான இந்திய அரசியலமைப்பு பற்றிய கேள்விகளுக்கு விடை அளிக்கலாம்.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மட்டுமல்லாது மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் உட்பட அனைத்து வகையான போட்டித் தேர்வுகளிலும் இந்திய அரசியலமைப்பு (Indian Polity) பகுதி மிக முக்கிய இடம் வகிக்கிறது. போட்டித் தேர்வுகளுக்காக மட்டுமின்றி, இந்திய அரசியலின் இயல்பு, அதன் தத்துவார்ந்த பின்புலம், அதன் செயல்பாடு, அதற்கென உருவாக்கப்பட்ட அமைப்புகள் என இந்திய அரசியலின் இயல்பை புரிந்து கொள்வது அனைவரின் கடமையாகும் .இந்திய அரசியலமைப்பின் சாராம்சங்களை புரிந்து கொள்ளாமல், போட்டித் தேர்வுகளின் வழியாக அரசு ஊழியராய் தேர்வாவது என்பது சாத்தியமில்லை. லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் போட்டித் தேர்வுகளில் ஒவ்வொரு மதிப்பெண்ணும் தலைவிதியை மாற்றும் திறனுடையது என் ப தால், இந்திய அரசியலமைப்பு போன்ற சமூக அறிவியல் பகுதிகளில் வரும் அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதில் அளிப்பது மிகவும் அவசியமாகும்.

**Thiru. Ganesh Subramanian**
**(Ganesh IAS Study Center Founder)**
**The Tamil Hindu Vetrikodi Paguthi**

**1.** இவற்றில் யார் / எது முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை குழுவுக்கு பொறுப்பானது?
[A] ஆளுநர் [B] குடியரத்தலைவர்
[C] மாநில சட்டமன்றம் [D] மாநில மக்கள்

**2.** கீழ்க்காணும் தொடரினை கருத்தில் கொள்க
1. குடியரசுத் தலைவரால் சட்டமன்றத்திற்கு மறு பரிசீலனை செய்யுமாறு திருப்பி அனுப்பப்பட்ட மசோதா மீண்டும் 14 மாதத்துக்குள் அனுப்ப வேண்டும்.
2. பண மசோதாவின் மீது குடியரசுத் தலைவர் தனது அனுமதி கொடுக்காமல் நிறுத்தி வைக்கலாம்.
எது சரியான கூற்று?
[A] 1 மட்டும் [B] 2 மட்டும்
[C] 1 மற்றும் 2 [D] எதுவுமில்லை

**3.** அரசியலமைப்பு திருத்த வரைமுறைப் பற்றி கூறும் ஷரத்து
[A] ஷரத்து 356 [B] ஷரத்து 368
[C] ஷரத்து 370 [D] ஷரத்து 353

**4.** இந்திய தொகுப்பு நிதியிலிருந்து (Consolidate Fund) செலவு செய்ய அனுமதி அளிப்பது யார்?
[A] குடியரசுத் தலைவர்
[B] பாராளுமன்றம்
[C] கணக்கு மற்றும் தணிக்கை தலைமை அலுவலர்
[D] நிதியமைச்சர்

**5.** திட்ட ஆணையம் உருவாக்கப்பட்டது?
[A] அமைச்சரவை தீர்மானம்
[B] பாராளுமன்ற தீர்மானம்
[C] குடியரசுத் தலைவரால்
[D] பிரதம அமைச்சரால்

**6.** கீழ்காணும் வாக்கியங்களை கவனி
1. ஆளுநர் அனைத்து பண மசோதாக்களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைப்பார்
2. சட்டப்பேரவையில் பண மசோதா குறித்து சபாநாயகர் எந்த முடிவும் எடுக்க மாட்டார்
மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி
[A] 1 மட்டும் [B] 2 மட்டும்
[C] 1 மற்றும் 2
[D] இரண்டும் இல்லை.

**7.** பின்வரும் வாக்கியங்களில் காண்க
1. இந்தியாவில் 25 உயர்நீதிமன்றங்கள் உள்ளன
2. ஹரியாணா மற்றும் சண்டிகருக்கு பொதுவான உயர்நீதிமன்றம் உள்ளது
3. டெல்லிக்கு தனியாக உயர்நீதிமன்றம் உள்ளது
மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி
[A] 2 மற்றும் 3 [B] 1 மட்டும் 2
[C] 1, 2, 3 [D] 3 மட்டும்

**8.** கீழ்க்காணும் வாக்கியங்களை கவனி
கூற்று [A] : அரசியலமைப்பை திருத்தம் செய்யும் வரம்பற்ற அதிகாரத்தை பாராளு மன்றம் பெற்றிருக்கவில்லை
காரணம் (R) : அடிப்படை கட்டமைப்பு மாறாமல் அரசியலமைப்பின் எந்த பகுதியையும் திருத்தும் அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உள்ளது என உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது.
சரியான விடையைத் தேர்ந்தெடு
[A] A சரி ஆனால் R தவறு
[B] A மட்டுமே சரி [C] R மட்டுமே சரி
[D] A மற்றும் R இரண்டும் சரி. R என்பது A க்கு சரியான விளக்கம்

**9.** 73-வது மற்றும் 74-வது சட்ட திருத் தம் தொடர்பாக எது தவறான கூற்று
1. உள்ளாட்சி அரசாங்கத்தில் மூன்றில் ஒரு பங்கு பெண்களுக்கு கட்டாயமாக்கியது
2. மாநிலம், பின் தங்கிய வகுப்பு சார்ந்த சட்டங்களை உள்ளாட்சி அரசுக்காக இயற்றலாம்
மேலே கொடுக்கப்பட்ட வாக்கியத்தில் எந்த வாக்கியம் சரி
[A] 1 மட்டும் [B] 2 மட்டும்
[C] இரண்டும் [D] எதுவுமில்லை

**10.** புதிய மாநிலங்களை உருவாக்க தேவையான பெரும்பான்மை
[A] சிறப்பு பெரும்பான்மை
[B] சாதாரண பெரும்பான்மை
[C] சிறப்பு பெரும்பான்மை மற்றும் மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளுதல்
[D] மேற்கண்ட எதுவுமில்லை

**11.** எந்த ஷரத்து மற்றும் பகுதி ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கிறது

[A] ஷரத்து 370 பகுதி XXII

[B] ஷரத்து 370 பகுதி XXI

[C] ஷரத்து 356 பகுதி XXI

[D] ஷரத்து 358 பகுதி XXII

**12.** மொழிவாரி சிறுபான்மையினர் ஆணையம் எப்போது உருவாக்கப் பட்டது? எங்கு அமைந்துள்ளது

[A] 1950, புதுடெல்லி [B] 1957 அலகாபாத்

[C] 1957 ஜம்மு [D] 1950 இம்பால்

**13.** எந்த சட்டத்திருத்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான ஆணையங்கள் தனித் தனியாக பிரிக்கப்பட்டன?

[A] 89-வது சட்டத்திருத்தம் 2003

[B] 99-வது சட்டத்திருத்தம் 2006

[C] 79-வது சட்டத்திருத்தம் 1998

[D] 86-வது சட்டத்திருத்தம் 2002

**14.** அதிக பழங்குடியின மக்கள் உள்ள மாவட்டத்தைக் கொண்டுள்ள மாநிலம் எது?

[A] மிசோரம் [B] மணிப்பூர்

[C] உத்திரபிரதேசம் [D] நாகலாந்து

**15.** நுகர்வோர் நீதிமன்றங்களில்

[A] வாய்மொழி விவாதம் மட்டுமே உண்டு

[B] எழுத்து மூலமான விவாதம் மட்டுமே உண்டு

[C] எழுத்து மூலமான விவாதத்துக்கு வாய்மொழி துணை விவாதம் உண்டு

[D] இவை அனைத்தும்

**16.** பின்வருவனவற்றில், உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62லிருந்து 65 வயது வரை உயர்த்திய சட்டத்திருத்தம் எது?

[A] 104-வது சட்டதிருத்தம்

[B] 101-வது சட்டதிருத்தம்

[C] 102-வது சட்டதிருத்தம்

[D] 103-வது சட்டதிருத்தம்

**17.** சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளை எப்போது தொடங்கப்பட்டது?

[A] 2001 [B] 2002

[C] 2003 [D] 2004

**18.** பொருத்துக

| | |
|---|---|
| A. சுதந்திர உரிமை | 1. ஷரத்து 23-24 |
| B. சமத்துவ உரிமை | 2. ஷரத்து 32 |
| C. சுரண்டல் எதிர்ப்பு | 3. ஷரத்து 19-22 |
| D. அரசியலமைப்பு தீர்வுக்கு | 4. ஷரத்து 14-18 |

A B C D A B C D

[A] 2 1 3 4 [B] 1 2 3 4

[C] 3 4 1 2 [D] 3 1 4 2

**19.** எந்த அரசியலமைப்பு சட்டதிருத்தம் மூலம் சொத்துரிமை அடிப்படை உரிமை யிலிருந்து வெளியில் கொண்டு செல்லப்பட்டது?

[A] 42-வது சட்டத்திருத்தம் கி.பி.1976

[B] 44-வது சட்டத்திருத்தம் கி.பி.1978

[C] 73-வது சட்டத்திருத்தம் கி.பி.1992

[D] 74-வது சட்டத்திருத்தம் கி.பி.1992

**20.** நெறிமுறை கோட்பாடுகள் இதனை அடிப்படையாக கொண்டது

[A] காந்திய கொள்கைகள்

[B] பரந்த-அறிவுசார் கொள்கைகள்

[C] சமூகவியல் கொள்கைகள்

[D] மேற்கூறிய அனைத்தும்.

**21.** நாடாளுமன்றத்தின் கூட்டமர்வு யாரால் கூட்டப்படும்?

[A] மக்களவை சபாநாயகர்

[B] பிரதமர்

[C] குடியரசுத் தலைவர்

[D] மாநிலங்களவை தலைவர்

**22.** ஒரு மசோதாவை பண மசோதா (அல்லது) மற்ற மசோதா என தீர்மானிப்பது யார்?

[A] சபாநாயகர் [B] ஜனாதிபதி

[C] பிரதமர்

[D] மாநிலங்களவை தலைவர்

**23.** கீழ்காணும் வாக்கியங்களை கருதுக

1. அரசியலமைப்பு சட்டத் திருத்த மசோதா மாநில சட்ட மன்றத்தால் தொடங்கப்பட முடியாது.

2. நாடு முழுவதும் மாநில சட்டமன்ற அமைப்பு ஒரே மாதிரியானவை

மேலே உள்ள வாக்கியத்தில் தவறான வற்றைத் தேர்ந்தெடு

[A] 1 மற்றும் 2 [B] 1 மட்டும்

[C] இரண்டும் சரி [D] 2 மட்டும்

**24.** கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி
1. பாராளுமன்ற இரு அவை உறுப்பினர்களும் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடலாம்.
2. 30 வயது முழுமை அடைந்தவரே குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்
3. குடியரசுத் தலைவர் ஆதாயம் தரும் எந்த ஒரு பதவியிலும் நீடிக்கக் கூடாது

சரியான வாக்கியங்களை தேர்வு செய்க

[A] 1 மட்டும் [B] 1, 2 மற்றும் 3
[C] 3 மட்டும் [D] 2 மற்றும் 3

**25.** எந்த மாநிலத்தில் முதன்முதலாக ஊராட்சி அரசாங்கம் அறிமுகப்படுத் தப்பட்டது?
[A] குஜராத் மாநிலத்தில்
[B] ராஜஸ்தான் மாநிலத்தில்
[C] பீகார் மாநிலத்தில்
[D] ஆந்திரப்பிரதேசம் மாநிலத்தில்

**26.** தமிழ்நாட்டில் பஞ்சாயத்து சமிதியின் தலைவர் எவ்வாறு அழைக்கப்படுகிறார்?
[A] அமைச்சர் [B] சேர்மன்
[C] மேயர் [D] அங்கத்தினர்

**27.** தேசிய வருமானத்தைக் கணக்கிட 1949 ஆம் வருடம் எந்தக் குழு அமைக்கப்பட்டது?
[A] தேசிய வருமான கணக்கீட்டு முறை
[B] தேசிய வருமான அலகு
[C] தேசிய வருமான குழு
[D] மத்திய புள்ளியியல் நிறுவனம்

**28.** கல்வி என்ற பொருள் எந்தப் பட்டியலில் வருகிறது?
[A] மாநில பட்டியல் [B] மத்திய பட்டியல்
[C] பொது பட்டியல் [D] எதுவுமில்லை

**29.** இரண்டு மாநிலங்களுக்கிடையே உள்ள நதி நீர் பிரச்சினையை பற்றி கூறும் ஷரத்து?
[A] ஷரத்து 262 [B] ஷரத்து 263
[C] ஷரத்து 272 [D] ஷரத்து 250

**30.** மூன்றடுக்கு ஊராட்சி முறையைப் பரிந்துரைத்தவர்
[A] அசோக் மேத்தா
[B] எஸ்.கே. டே
[C] பல்வந்த்ராய் மேத்தா
[D] கிருஷ்ணமாச்சாரி

**31.** சரியான கூற்று எது?
1. பல்வந்தராய் மேத்தாவால் மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை பரிந்துரைக்கப்பட்டது
2. அசோக் மேத்தாவால் இரண்டடுக்கு பஞ்சாயத்து முறை பரிந்துரை செய்யப்பட்டது

மேலே உள்ள வாக்கியங்களில் சரியான வற்றைத் தேர்ந்தெடு

[A] 2 மட்டும் [B] 1 மட்டும்
[C] இரண்டும் [D] எதுவுமில்லை

**32.** நிதி மசோதா எந்த அவையில் அறிமுகப்படுத்தப்படுகிறது?
[A] லோக் சபாவில் மட்டும்
[B] ராஜ்ய சபாவில் மட்டும்
[C] லோக் சபா மற்றும் ராஜ்ய சபாவில்
[D] இவற்றுள் எதுவுமில்லை

**33.** ஒரு மாநிலத்தின் சட்டசபையைக் கலைக்கும் அதிகாரத்தை ஜனாதி பதிக்கு அளிக்கும் குடியுரிமை சட்டத்தின் பிரிவு எது?
[A] பிரிவு 256 [B] பிரிவு 356
[C] பிரிவு 254 [D] பிரிவு 354

**34.** நீதிப்பேராணைகளை வழங்குவதற்கு உச்சநீதிமன்றம் அதிகாரம் பெற்றிருப்பது இதன் மூலமாக
[A] அரசியலமைப்பு சட்டம் 126
[B] அரசியலமைப்பு சட்டம் 226
[C] அரசியலமைப்பு சட்டம் 32
[D] அரசியலமைப்பு சட்டம் 132

**35.** குடியரசுத் தலைவரின் தடுப்பதிகார உரிமைகளில் உள்ளடங்காதவை?
[A] முழுமையான தடுப்பதிகார உரிமை
[B] தகுதியான தடுப்பதிகார உரிமை
[C] தற்காலிக தடுப்பதிகார உரிமை
[D] மறைமுக உரிமை

**36.** இந்திய அரசியலமைப்பின் எந்த அட்டவணையில் பஞ்சாயத்து முறையின் ஆற்றல், அதிகாரம் மற்றும் பொறுப்புகள் குறிப்பிடப் பட்டுள்ளன?
[A] 7-வது அட்டவணை
[B] 9-வது அட்டவணை
[C] 11-வது அட்டவணை
[D] 12-வது அட்டவணை

**37.** கீழ்க்கண்டவற்றை பொருத்துக
சிறப்பம்சங்கள் - நாடுகள்
A. சட்டத்தின் ஆட்சி- அயர்லாந்து
B. நீதி புனராய்வு- ஆஸ்திரேலியா
C. பொதுப்பட்டியலில் உள்ள கருத்துகள்- அமெரிக்கா
D. அரசின் நெறிமுறை கோட்பாடுகள்- இங்கிலாந்து

| | A B C D | | A B C D |
|---|---|---|---|
| [A] | 4 2 3 1 | [B] | 1 2 3 4 |
| [C] | 2 3 1 4 | [D] | 4 3 2 1 |

**38.** 1978-வருடத்திய 44-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலம் குடியரசு தலைவர் தேச நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்த யாருடைய ஆலோசனைகளை ஏற்று செயல்பட வேண்டும்?
[A] மத்திய அமைச்சரவை குழு
[B] கேபினட் அமைச்சர்கள்
[C] அட்டார்னி ஜெனரல்
[D] உச்சநீதிமன்றம்

**39.** இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் குடியரசுத் தலைவர் எந்த ஷரத்தின் கீழ் நெருக்கடி நிலையை பிரகடனப்படுத்துகிறார்
[A] ஷரத்து 352 [B] ஷரத்து 355
[C] ஷரத்து 356 [D] ஷரத்து 360

**40.** கீழ்க்கண்டவர்களில் யார் மாநில அரசாங்கத்தின் ஒரே பிரதிநிதியாக மாவட்டத்தில் இருக்கிறார்?
[A] ஜில்லா பரிஷத் தலைவர்
[B] அந்த மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்
[C] கோட்ட ஆணையர்
[D] மாவட்ட ஆட்சியர்

**41.** ஒரு மாநிலத்தின் உண்மையான ஆட்சித் துறை அதிகாரம் யாரிடம் உள்ளது?
[A] ஆளுநர்
[B] சபாநாயகர்
[C] முதல்-அமைச்சர்
[D] முதல்-அமைச்சர் மற்றும் அவரது அமைச்சரவை

**42.** கீழ்க்கண்டவற்றில் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை எவை?
1. குடியரசுத் தலைவர் பாராளுமன்ற இரு அவைகளிலும் உறுப்பினராக இருக்க மாட்டார்
2. பாராளுமன்றம் என்பது குடியரசுத் தலைவர் மற்றும் இரு அவைகளையும் கொண்டது
பின்வரும் வரிசையில் சரியான விடையை தேர்வுசெய்
[A] இரண்டுமில்லை [B] இரண்டும்
[C] ஒன்று மட்டும் [D] இரண்டு மட்டும்

**43.** மாநிலங்களவையின் உறுப்பினர் ஆவதற்கான குறைந்தபட்ச வயது வரம்பு?
[A] 25 [B] 30
[C] 35 [D] 50

**44.** கீழ்க்கண்டவற்றுள் மாநிலங்களுக்கு இடையேயான குழுவை பரிந்துரை செய்தது யார்?
[A] பன்ஜி குழு [B] சர்காரியா குழு
[C] தார் குழு [D] மண்டல் குழு

**45.** சோசலிஷ மற்றும் மதச்சார்பற்ற என்ற 2 வார்த்தைகள் இந்திய அரசியலமைப்பின் முகவுரையில் எந்த சட்டத்திருத்தம் மூலம் சேர்க்கப்பட்டது?
[A] 42-வது சட்டத்திருத்தம்
[B] 24-வது சட்டத்திருத்தம்
[C] 44-வது சட்டத்திருத்தம்
[D] இவற்றில் எதுவும் இல்லை

**46.** நெறிமுறை கோட்பாடுகள் அரசியலமைப்பின் எந்த பகுதியில் உள்ளன?
[A] பகுதி V [B] பகுதி IV
[C] பகுதி III [D] பகுதி IX

**47.** எது சரியான கூற்று
1. அட்டவணைப் பகுதியின் எல்லைகளை நாடாளுமன்றம் கூட்டலாம் அல்லது குறைக்கலாம்
2. அட்டவணைப்பகுதி என அறிவிக்கும் அதிகாரத்தை குடியரசுத்தலைவர் பெற்றுள்ளார்
மேலே உள்ள வாக்கியங்களில் சரியான வற்றைத் தேர்ந்தெடு
[A] 1 மட்டும் [B] 2 மட்டும்
[C] இரண்டும் [D] எதுவுமில்லை

**48. கீழ்க்கண்டவற்றை பொருத்து**

A. அரசியலமைப்பின் பாகம்-II - 1. அரசின் நெறிமுறை கோட்பாடுகள்

B. அரசியலமைப்பின் பாகம்-IV - 2. மாநில அரசாங்கம்

C. அரசியலமைப்பின் பாகம்-VI - 3. சட்டத் திருத்தம்

D. அரசியலமைப்பின் பாகம்-XX - 4. குடியுரிமை

A B C D  A B C D

[A] 4 1 2 3  [B] 1 2 3 4

[C] 2 3 1 4  [D] 4 3 2 1

**49. கீழ்க்கண்ட வாக்கியங்களில் ஆளுநர் பற்றிய தகவல்களில் சரியானவை?**

1. இவர் அரசியலமைப்பின் ரீதியாக ஒரு மாநிலத்தின் தலைவராவார்
2. இவர் மத்திய அரசின் பிரதிநிதியாவார்.

சரியான விடையைத் தேர்வு செய்க

[A] 1 மட்டும்  [B] 2 மட்டும்

[C] இரண்டும்  [D] எதுவுமில்லை

**50. இந்திய அரசியலமைப்பின் முன்னுரை திருத்தி அமைக்கப்பட்ட ஆண்டு**

[A] 1950  [B] 1972

[C] 1976  [D] 1978

**51. அரசியலமைப்பு சட்ட முகப்புரையில் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் அமைப்பின் நோக்கங்கள் எவை?**

[A] அனைவருக்கும் நீதி, சுதந்திரம், சமதர்மம், சகோதரத்துவம்

[B] அனைவருக்கும் நீதி, சுதந்திரம், சகோதரத்துவம்

[C] அனைவருக்கும் நீதி, சமதர்மம், சகோதரத்துவம்

[D] இவற்றில் எதுவுமில்லை

**52. உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி யார்?**

[A] அன்னா சாண்டி

[B] விஜயலட்சுமி பண்டிட்

[C] இந்திரா காந்தி  [D] பாத்திமா பீவி

**53. இந்திய அரசால் வழங்கப்படும் மிக உயரிய சிவிலியன் விருதான பாரத ரத்னா எந்த ஆண்டு முதல் வழங்கப் படுகிறது?**

[A] 1947  [B] 1954

[C]1952  [D]1953

**54. கீழ்க்கண்டவற்றை பொருத்துக-**

A. 24-வது சட்டத்திருத்தம் - 1. சொத்துரிமை நீக்கம்

B. 42-வது சட்டத்திருத்தம் - 2. கட்சித்தாவல் தடை சட்டம்

C. 44-வது சட்டத்திருத்தம் - 3. அடிப்படை உரிமைகள்

D. 52-வது சட்டத்திருத்தம் - 4. அடிப்படை உரிமைகள் மீதான பாராளுமன்றத்தின் அதிகாரம்

A B C D  A B C D

[A] 4 1 2 3  [B] 1 2 3 4

[C] 4 3 1 2  [D] 4 3 2 1

**55. கட்சி தாவல் தடை சட்டம் எந்த ஆண்டு இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது?**

[A] 1985  [B] 1989

[C] 2002  [D] 2006

**56. பின்வருவனவற்றுள் எது தேச நெருக்கடி நிலையை கொண்டுவருவதற்கு ஏற்ற காரணமாக இல்லை?**

[A] போர்

[B] வெளிநாட்டு ஆக்கிரமிப்பு

[C] ஆயுத கலவரம்

[D] உள்நாட்டு குழப்பம்

**57. 99-வது சட்டத்திருத்தம் எதோடு தொடர்புடையது?**

[A] தேசிய நீதித்துறை நியமன ஆணையம்

[B] இந்தியா - வங்கதேச எல்லை உடன்படிக்கை

[C] ஷரத்து 371  [D] ஷரத்து 312

**58. பாராளுமன்றம் என்பது**

[A] கீழ்சபை மற்றும் மேல்சபை

[B] ஜனாதிபதி, கீழ்சபை மற்றும் மேல்சபை

[C] கீழ்சபை, மத்திய அமைச்சரவை மற்றும் மேல்சபை

[D] கீழ்சபை, மேல்சபை மற்றும் துணை ஜனாதிபதி

**59. இந்தியாவின் தலைமை கணக்கு தணிக்கையாளரை (Comptroller and Auditor General of India] நியமிப்பவர் யார்?**

[A] ஜனாதிபதி  [B] துணை ஜனாதிபதி

[C] மேல்சபை  [D] கீழ்சபை

**60.** பின்வரும் அமைச்சகங்களில் எந்த அமைச்சகம் சமூக பொருளாதார சாதி கணக்கெடுப்புக்கு பொறுப்பு?
[A] சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம்
[B] கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகம்
[C] சிறுபான்மை விவகாரங்கள் அமைச்சகம்
[D] வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகம்

**61.** அமைச்சரவை அளவை வரையறுப்பது
[A] 86-வது சட்டத்திருத்தம்
[B] 91-வது திருத்தம்
[C] 108 -வது திருத்தம்
[D] 98-வது திருத்தம்

**62.** கீழ்க்கண்டவற்றில் அரசியலமைப்புச் சட்டத்தின் 8-வது அட்டவணையில் இடம்பெறாத மொழி எது?
[A] மைதிலி [B] டோக்ரி
[C] துளு [D] சாந்தலி

**63.** கீழ் உள்ளவற்றில் எது உச்ச நீதி மன்றத்தின் அசல் அதிகார வரம்புக்கு உட்பட்டது?
1. மாநிலங்களுக்கு இடையேயான நீர் பிரச்சினை
2. ஜனாதிபதி, துணை ஜனாதிபதி தேர்தல் தொடர்பான பிரச்சினை
[A] 1 மற்றும் 2 [B] 1 மட்டும்
[C] 2 மட்டும்
[D] இவை ஏதுமில்லை

**64.** இந்திய அரசியலமைப்பில் உள்ள அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் எதனை வழங்குகிறது?
[A] அரசியல் ஜனநாயகம்
[B] சமூக ஜனநாயகம்
[C] சமூக மற்றும் பொருளாதார ஜனநாயகம்
[D] இவற்றில் எதுவுமில்லை

**65.** பாராளுமன்றத்தின் கூட்டு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்துபவர் யார்?
[A] ஜனாதிபதி
[B] துணை ஜனாதிபதி
[C] மக்களவை சபாநாயகர்
[D] பிரதமர்

**66.** பொருத்துக:-
A. ஜனாதிபதி மற்றும் ஆளுநர் பாதுகாப்பு - 1.ஷரத்து 361
B. மக்களவை மற்றும் சட்டமன்ற தேர்தல் - 2.ஷரத்து 326
c. தாழ்த்தப்பட்டோர் ஆணையம்-3.ஷரத்து 338
D. மாநிலங்களுக்கு இடையேயான கவுன்சில் - 4.ஷரத்து 263

| A B C D | | A B C D | |
|---|---|---|---|
| [A] 4 1 3 2 | | [B] 2 3 4 1 | |
| [C] 1 2 3 4 | | [D] 4 2 1 3 | |

**67.** அரசியல் நிர்ணய சபையின் முதல் கூட்டம் நடைபெற்ற ஆண்டு?
[A]1950 [B]1946
[C]1948 [D]1947

**68.** கீழ்க்கண்டவற்றுள் எவை மாநிலங் களுக்கான அதிகார பட்டியலில் உள்ளன?
1. பொது ஒழுங்கு 2. விவசாயம்
3. பந்தய சூதாட்டம் 4. உயர்நீதிமன்ற அமைப்பு
[A] 1,2,3 மட்டும் [B] 1,2,3,4 மட்டும்
[C] 1,2 மட்டும் [D] 1,3,4 மட்டும்

**69.** மாநிலங்களில் ஜனாதிபதி ஆட்சியை ஏற்படுத்த பரிந்துரை செய்யும் விதி?
[A] விதி 354 [B] விதி 355
[C] விதி 356 [D] விதி 357

**70.** அரசியலமைப்பின் எந்த விதி ஜனாதிபதிக்கு மக்களவையை கலைப்பதற்கு அதிகாரம் அளித்துள்ளது?
[A] விதி 85 [B] விதி 75
[C] விதி 74 [D] விதி 88

**71.** 1953-ல் மாநில மறுசீராய்வு குழுவின் தலைவராக இருந்தவர் யார்?
[A] கே.எம்.பணிக்கர்
[B] எச்.என்.ஹன்ஸ்ரு
[C] பைசல் அலி
[D] ஜவஹர்லால் நேரு

**72.** ஆளுநர் அவசர சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் எந்த ஷரத்தில் உள்ளது?
[A] ஷரத்து 123 [B] ஷரத்து 213
[C] ஷரத்து 152
[D] இவை எதுவுமில்லை

**73.** சரியானவற்றை தேர்ந்தெடு:-

1. துணை ஜனாதிபதியை நீக்குவது குறித்து அரசியலமைப்பு சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை
2. அமைச்சர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக பாராளுமன்றத்துக்கு கட்டுப்பட்டவர்கள்
3. அமைச்சர்களின் சம்பளம் மற்றும் படிகள் ஜனாதிபதியால் தீர்மானிக்கப்படு கின்றன
4. லேம் டக் அமர்வு (Lame Duck Session)என்பது நாடாளுமன்றத்தில் நடக்கும் கடைசி அமர்வைக் குறிக்கும்

[A] 2,3 மட்டும் [B] 3,4 மட்டும்
[C] 1,4 மட்டும் [D] அனைத்தும்

**74.** மேலவை (Bicameral Legislature) உள்ள மாநிலங்கள் எவை?

1. மகாராஷ்டிரா
2. பீகார்
3. உத்தரப் பிரதேசம்
4. ஒடிசா
5. மத்தியப் பிரதேசம்

[A] 1,2,3 மட்டும் [B] 1,2,4 மட்டும்
[C] 1,2,5 மட்டும் [D] 3,4,5 மட்டும்

**75.** முதல்முதலில் லோக் ஆயுக்தா மகாராஷ்டிராவில் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

[A] 1971 [B] 1970
[C] 1983 [D] 1976

**76.** பொது கணக்கு குழுவின் தலைவர் யார்?

[A] மக்களவை சபாநாயகர்
[B] குடியரசுத் தலைவர்
[C] எதிர்க்கட்சித்தலைவர்
[D] பிரதமர் ஜனாதிபதி

**77.** விகிதாச்சார பிரதிநிதித்துவமுறைப் படி எந்த தேர்தல் நடைபெறுகிறது?

[A] மாநிலங்களவை தலைவர்
[B] மக்களவை சபாநாயகர்
[C] மக்களவை உறுப்பினர்
[D] சட்டப்பேரவை உறுப்பினர்

**78.** மாநிலங்களுக்கு இடையிலான நீர் பிரச்சினைகள் பற்றி எந்தப் பிரிவில் கூறப்பட்டுள்ளது?

[A] பிரிவு 370 [B] பிரிவு 262
[C] பிரிவு 263 [D] பிரிவு 301

**79.** பொருத்துக:-

A. நிதி ஆணையம் - 1. ஷரத்து 148
B. இந்திய கணக்கு தணிக்கையாளர் - 2. ஷரத்து 324
C. தேர்தல் ஆணையம் - 3. ஷரத்து 280
D. யுபிஎஸ்சி - 4. ஷரத்து 315

| | A B C D | | A B C D |
|---|---|---|---|
| [A] | 3 2 1 4 | [B] | 3 1 2 4 |
| [C] | 4 1 2 3 | [D] | 4 2 1 3 |

**80.** கீழ்க்கண்ட நபர்களில் யார் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நீக்க முடியும்?

[A] ஜனாதிபதி [B] ஆளுநர்
[C] முதல்-அமைச்சர் [D] பிரதமர்

**81.** மாநிலங்களவை பாராளுமன்றத்துக்கு மாநில பட்டியலில் உள்ள பொருளடக்கம் மீது சட்டங்கள் உருவாக்க எந்த விதி அங்கீகரிக்கிறது?

[A] ஷரத்து 248 [B] ஷரத்து 249
[C] ஷரத்து 250 [D] ஷரத்து 247

**82.** 14-வது நிதி ஆணையத்தின் (Finance Commission) தலைவர் யார்?

[A] கே.சந்தானம்
[B] பி.வி.ராஜமன்னார்
[C] டாக்டர் விஜய் எல்.கேல்கர்
[D] டாக்டர் ஒய்.வி.ரெட்டி

**83.** இந்திய அரசியலமைப்பில் எந்த பகுதி யில் தேர்தல் ஆணையம் உள்ளது?

[A] பாகம்-III [B] பாகம்-XV
[C] பாகம்-XX [D] பாகம்-XXII

**84.** மாநில பணியாளர் தேர்வாணையத்தின் தலைவரை நியமிப்பவர் யார்?

[A] ஜனாதிபதி [B] ஆளுநர்
[C] முதல்-அமைச்சர்
[D] சட்டமன்ற சபாநாயகர்

**85.** தேசிய அவசர கால பிரகடன நிலை (External Emergency) எத்தனை முறை இந்தியாவில் அமல்படுத்தப் பட்டுள்ளது?

[A] 1 [B] 2
[C] 3
[D] ஒருமுறைகூட அமல்படுத்தப்படவில்லை

86. பின்வருவனவற்றில் எது அல்லது எவை சரியானவை?
1. அடிப்படை கடமை பற்றி விளக்கியுள்ள பகுதி - IV A
2. ஸ்வரண்சிங் குழு 8 அடிப்படை உரிமைகளை பரிந்துரைத்தது
3. 42-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மூலம் 10 அடிப்படை கடமைகள் இணைக்கப்பட்டன
4. அடிப்படை கடமைகள் குடிமக்களுக்கு மட்டுமே, வெளிநாட்டவர்களுக்கு இல்லை

[A] 1 மட்டும் [B] 2 மட்டும்
[C] 1,4 மட்டும் [D] அனைத்தும்

87. பஞ்சாயத்து ராஜுக்கு அரசியல் சாசன அந்தஸ்து வழங்க எந்த குழு பரிந்துரைத்தது?
[A] பல்வந்த்ராய் மேத்தா குழு
[B] எல்.எம்.சிங்வி குழு
[C] ஜி.வி.கே.ராவ் குழு
[D] அசோக் மேத்தா குழு

88. பாராளுமன்றத்தில் உள்ள மிகப்பெரிய குழு
[A] விதிகள் குழு
[B] மதிப்பீட்டுக்குழு
[C] பொதுத்துறை குழு
[D] பொது கணக்கு குழு

89. மாநில அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம்
[A] 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை
[B] 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை
[C] 4 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை
[D] 6 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை

90. பின்வருவனவற்றுள் எது இந்திய அரசியலமைப்பிலிருந்து வேறுபட்டுள்ளது?
[A] கூட்டாட்சி அரசாங்கம்
[B] பாராளுமன்ற அரசாங்கம்
[C] ஜனாதிபதி அரசாங்கம்
[D] சுதந்திரமான நீதித்துறை

91. இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் கட்டாய கல்வி வழங்கும் சட்டம் இடம்பெற்றுள்ள ஷரத்து
[A] ஷரத்து 21 [B] ஷரத்து 21-ஏ
[C] ஷரத்து 25 [D] ஷரத்து 45

92. கீழ்க்கண்டவற்றில் எது சரி?
[A] இந்திய அரசியலமைப்பை திருத்தும் அதிகாரத்தை பாராளுமன்றம் பெற்றுள்ளது
[B] இந்திய அரசியலமைப்பை திருத்த அரசியலமைப்பு திருத்தக்குழு உள்ளது
[C] மாநில அரசு, அரசியலமைப்பை திருத்த தொடக்கத்தை கொண்டுவரலாம்
[D] அடிப்படை உரிமைகளை சட்டத்திருத்தம் மூலம் மாற்ற முடியாது

93. அண்மையில் நியமிக்கப்பட்ட உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி
[A] எச்.எல்.தத்து
[B] ஆர்.எம்.லோதா
[C] பி.சதாசிவம்
[D] டி.எஸ்.தாக்கூர்

94. இந்திய அரசியலமைப்பில் எஞ்சிய அதிகாரம் யாரிடம் உள்ளது?
[A] மத்திய அரசு
[B] மாநில அரசு
[C] நீதித்துறை
[D] இவை எதுவுமில்லை

95. அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதா எந்த அவையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்?
[A] மக்களவை
[B] மாநிலங்களவை
[C] மக்களவை அல்லது மாநிலங்களவை
[D] இவை ஏதுமில்லை

96. இந்திய அரசியலமைப்பில் எந்த அடிப்படை உரிமைகளில் தீண்டாமை பற்றி கூறப்பட்டுள்ளது?
[A] சுதந்திரத்துக்கான உரிமை
[B] சமத்துவத்துக்கான உரிமை
[C] சுரண்டலுக்கு எதிரான உரிமை
[D] சமய சுதந்திரத்துக்கான உரிமை

97. அரசியலமைப்பு சட்டம், நிர்வாக அதிகாரத்தை யாரிடம் ஒப்படைத்துள்ளது?
[A] ஜனாதிபதி
[B] பாராளுமன்றம்
[C] பிரதமர்
[D] உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம்

**98.** **பொது சிவில் சட்டம் அரசியலமைப்பின் எந்த ஷரத்தில் இடம்பெற்றுள்ளது?**

[A] **ஷரத்து** 40 [B] **ஷரத்து** 44
[C] **ஷரத்து** 47 [D] **ஷரத்து** 48

**99.** **மாநில சட்டமன்றத்தின் மேலவையை நீக்கவோ அல்லது உருவாக்கவோ அதிகாரம் பெற்றிருப்பவர்/பெற்றிருப்பது**

[A] **ஜனாதிபதி**
[B] **பாராளுமன்றம்**
[C] **மாநில சட்டமன்றம்**
[D] **மாநில ஆளுநர்**

**100.** **மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி பாராளுமன்ற, சட்டப்பேரவை தொகுதிகளை மறுசீரமைப்பு செய்யும் அதிகாரம் கொண்ட அமைப்பு**

[A] **தொகுதி சீரமைப்பு ஆணையம்**
[B] **தேர்தல் ஆணையம்**
[C] **கேபினட் செயலாளர்**
[D] **மேற்கண்ட எதுவுமில்லை**

---

## ALL THE BEST

தி இந்து

Ganesh's ias
Discover Your Potential

DATE:

**www.tnpscjob.com**

# MOCK TEST -15

**NAME :** **ROLL NO:**

**START** **TIME: 1:30 hrs** **OMR COADING SHEET**

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | A | B | C | D | 26 | A | B | C | D | 51 | A | B | C | D | 76 | A | B | C | D |
| 02 | A | B | C | D | 27 | A | B | C | D | 52 | A | B | C | D | 77 | A | B | C | D |
| 03 | A | B | C | D | 28 | A | B | C | D | 53 | A | B | C | D | 78 | A | B | C | D |
| 04 | A | B | C | D | 29 | A | B | C | D | 54 | A | B | C | D | 79 | A | B | C | D |
| 05 | A | B | C | D | 30 | A | B | C | D | 55 | A | B | C | D | 80 | A | B | C | D |
| 06 | A | B | C | D | 31 | A | B | C | D | 56 | A | B | C | D | 81 | A | B | C | D |
| 07 | A | B | C | D | 32 | A | B | C | D | 57 | A | B | C | D | 82 | A | B | C | D |
| 08 | A | B | C | D | 33 | A | B | C | D | 58 | A | B | C | D | 83 | A | B | C | D |
| 09 | A | B | C | D | 34 | A | B | C | D | 59 | A | B | C | D | 84 | A | B | C | D |
| 10 | A | B | C | D | 35 | A | B | C | D | 60 | A | B | C | D | 85 | A | B | C | D |
| 11 | A | B | C | D | 36 | A | B | C | D | 61 | A | B | C | D | 86 | A | B | C | D |
| 12 | A | B | C | D | 37 | A | B | C | D | 62 | A | B | C | D | 87 | A | B | C | D |
| 13 | A | B | C | D | 38 | A | B | C | D | 63 | A | B | C | D | 88 | A | B | C | D |
| 14 | A | B | C | D | 39 | A | B | C | D | 64 | A | B | C | D | 89 | A | B | C | D |
| 15 | A | B | C | D | 40 | A | B | C | D | 65 | A | B | C | D | 90 | A | B | C | D |
| 16 | A | B | C | D | 41 | A | B | C | D | 66 | A | B | C | D | 91 | A | B | C | D |
| 17 | A | B | C | D | 42 | A | B | C | D | 67 | A | B | C | D | 92 | A | B | C | D |
| 18 | A | B | C | D | 43 | A | B | C | D | 68 | A | B | C | D | 93 | A | B | C | D |
| 19 | A | B | C | D | 44 | A | B | C | D | 69 | A | B | C | D | 94 | A | B | C | D |
| 20 | A | B | C | D | 45 | A | B | C | D | 70 | A | B | C | D | 95 | A | B | C | D |
| 21 | A | B | C | D | 46 | A | B | C | D | 71 | A | B | C | D | 96 | A | B | C | D |
| 22 | A | B | C | D | 47 | A | B | C | D | 72 | A | B | C | D | 97 | A | B | C | D |
| 23 | A | B | C | D | 48 | A | B | C | D | 73 | A | B | C | D | 98 | A | B | C | D |
| 24 | A | B | C | D | 49 | A | B | C | D | 74 | A | B | C | D | 99 | A | B | C | D |
| 25 | A | B | C | D | 50 | A | B | C | D | 75 | A | B | C | D | 100 | A | B | C | D |

## MOCK TEST -15 ANSWER KEY (INDIAN POLITY)

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 11 | B | 21 | C | 31 | C | 41 | C | 51 | A | 61 | B | 71 | C | 81 | A | 91 | B |
| 2 | B | 12 | B | 22 | A | 32 | A | 42 | B | 52 | D | 62 | C | 72 | B | 82 | D | 92 | A |
| 3 | B | 13 | A | 23 | B | 33 | B | 43 | B | 53 | B | 63 | C | 73 | C | 83 | B | 93 | D |
| 4 | B | 14 | A | 24 | C | 34 | C | 44 | B | 54 | C | 64 | C | 74 | A | 84 | B | 94 | A |
| 5 | A | 15 | C | 25 | B | 35 | B | 45 | A | 55 | A | 65 | C | 75 | A | 85 | C | 95 | C |
| 6 | D | 16 | A | 26 | B | 36 | C | 46 | B | 56 | D | 66 | C | 76 | C | 86 | D | 96 | B |
| 7 | A | 17 | D | 27 | C | 37 | D | 47 | B | 57 | A | 67 | B | 77 | A | 87 | B | 97 | A |
| 8 | D | 18 | C | 28 | C | 38 | A | 48 | A | 58 | B | 68 | A | 78 | B | 88 | B | 98 | B |
| 9 | A | 19 | B | 29 | A | 39 | A | 49 | C | 59 | A | 69 | C | 79 | B | 89 | D | 99 | B |
| 10 | B | 20 | D | 30 | C | 40 | D | 50 | C | 60 | B | 70 | A | 80 | A | 90 | C | 100 | A |